செ.வெ.எண்.347/2009/செமதொஅ நாள்:13.10.2009

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் பருவமழையின் போது சேதம் ஏற்படாமல் தடுக்க முன்னேற்பாடு பணிகள் ஒரு மாத காலத்திற்குள் முடிக்கப்படும் - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தகவல்**

வடகிழக்கு பருவமழையினால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெள்ளம் ஏற்படாமல் தடுப்பது குறித்த ஆய்வுக் கூட்டம் பல்லாவரம் நகராட்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராசன், பல்லவபுரம் நகரமன்றத் தலைவர் திரு.இ.கருணாநிதி, குன்றத்தூர் ஒன்றியக்குழுத் தலைவர் திரு.ஆ.மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்திற்கு பின் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில், “கடந்த ஆண்டு பருவமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளைப் போல இந்த ஆண்டு மக்கள் பாதிப்படையா வண்ணம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதன்படி மாவட்டத்திலுள்ள நீர்பிடிப்பு பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், பொதுப்பணித்துறை கால்வாய்களை தூர்வாருதல், செம்பரம்பாக்கத்திலிருந்து வரும் நீரை அடையாற்றில் கலக்க செய்தல், தாம்பரம், பல்லாவரம், அனகாபுத்தூர், பம்மல், புனிததோமையர்மலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிராமங்கள் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதைப் போல இந்த ஆண்டு மக்கள் பாதிப்பு அடையாத வண்ணம் முன்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வெள்ளநீர் தேங்காதவாறு வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து துறை அதிகாரிகளையும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு எவ்வளவு மழை பெய்தாலும் மக்கள் பாதிப்படையாத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் உள்ள உடைந்த, பழுதான மதகுகள் சரிசெய்யப்பட்டும், ஏரிகளில் உடைப்பு ஏற்படும் இடங்கள் சரிசெய்யப்பட்டும் வருகின்றன. மூவரசம்பட்டு ஏரி ரூ.10 லட்சம் மதிப்பீட்டிலும், சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மடிப்பாக்கம் ஏரி ரூ.10 லட்சம் மதிப்பீட்டிலும் தூர் வாரப்பட்டு மேம்படுத்தப்படும். ஆதம்பாக்கம் ஏரி மற்றும் வீரங்கால் ஓடை சீரமைக்கும்பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட அனைத்து பணிகளையும் ஒரு மாத காலத்திற்குள் முடிக்க உத்தரவு இடப்பட்டுள்ளது. தாம்பரம் ஏரி, நாராயணபுரம் ஏரி, பள்ளிக்கரணை ஏரி ஆகிய ஏரிகளில் 400க்கு மேற்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் அகற்றப்பட்டு, அவர்கள் பெருங்களத்தூரில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இந்த கூட்டமானது முன்னேற்பாட்டு பணிகளை வேகப்படுத்துவற்கான கூட்டம் ஆகும் என்று தெரிவித்தார்.

முன்னதாக வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, நகராட்சித் துறை, பேரூராட்சித்துறை, காவல் துறை, தீயணைப்புத்துறை ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்களின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேற்கண்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.